93437

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

5

**EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, AUGUST 2018**

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2018 ஓகஸ்ற்**

# வினாத்தாள் I

**45 நிமிடம்**

சுட்டெண் :...............................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- ※ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**
- ※ **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ※ ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- ※ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| **இறுதிப் புள்ளிகள்** | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T/EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/I/T/CH |

[பக். 2 ஐப் பார்க்க

**14.** இலக்கங்களுக்குப் பதிலாகக் குறியீடுகளை இட்டு அறுநூற்று முப்பத்தெட்டு பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

638 ⟶ ✷ # ⊗

இக்குறியீடுகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க பெரிய எண்ணைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) ⊗ ✷ # (2) ✷ ⊗ # (3) ⊗ # ✷

**15.** சங்கரின் தங்கை ரேவதி ஆவாள். அவளுக்கு மூன்று சகோதரர்களும் இரு சகோதரிகளும் உள்ளனர். சங்கருக்கு இருக்கும் சகோதரர்களின் எண்ணிக்கையும் சகோதரிகளின் எண்ணிக்கையும் யாவை ?

(1) சகோதரர்கள் 2, சகோதரிகள் 2

(2) சகோதரர்கள் 2, சகோதரிகள் 3


(3) சகோதரர்கள் 3, சகோதரிகள் 3

**16.** ● ■ / ■ ▲ என்னும் குறியீட்டைப் பயன்படுத்திக் **கடகம்** என்னும் சொல் எழுதப்பட்டிருந்தது.

அதற்கு ஏற்ப ■ ▲ ● என்னும் குறியீட்டினால் காட்டப்படும் சொல் யாது ?

(1) கடம் (2) படம் (3) வடம்

**17.** ஓர் எரியும் மெழுகுவர்த்தியின் உயரம் அது கொளுத்தப்பட்ட கணத்திலிருந்து எடுத்த நேரத்துடன் மாறும் விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.



எரியும் கணம் | 5 நிமிடத்திற்குப் பின்னர் | 10 நிமிடத்திற்குப் பின்னர் | 15 நிமிடத்திற்குப் பின்னர் | 20 நிமிடத்திற்குப் பின்னர்

இதற்கேற்ப மெழுகுவர்த்தி மேலும் எவ்வளவு நேரத்துக்கு எரியுமென ஊகிக்கலாம் ?

(1) 5 நிமிடம் (2) 10 நிமிடம் (3) 15 நிமிடம்

**18.** முந்தநாள் புதன்கிழமை. மோகனின் பிறந்த தினம் நாளையின்றைக்கு வருகின்றது. மோகனின் பிறந்த தினம் வரும் நாள் யாது ?

(1) சனிக்கிழமை (2) ஞாயிற்றுக்கிழமை (3) திங்கட்கிழமை

**19.** பின்வரும் வரிப்படத்திற்கு ஏற்ப இரு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான **இரு** உருக்களும் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

F ⟶ ꟻ எனின் P ⟶ ..................


E ⟶ Ǝ எனின் C ⟶ ..................

(1) ꟼ உம் Ɔ உம் (2) P உம் Ɔ உம் (3) ꟼ உம் ∪ உம்

Past Papers Wiki



● உருவில் ஒவ்வொரு பக்கத்திலும் நிற மை பூசப்பட்டுள்ள ஒரு திண்ம மரக் குற்றி தரப்பட்டுள்ளது. அதனை முறிந்த கோடுகள் வழியே வெட்டி, பல சிறிய மரக் குற்றிகள் பெறப்பட்டன. அதனைக் கொண்டு **20, 21** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




**20.** முறிந்த கோடு வழியே வெட்டும்போது எத்தனை சிறிய மரக் குற்றிகள் கிடைக்கும் ?

(1) 21 (2) 36 (3) 42

**21.** ஒரு பக்கத்தில் மாத்திரம் நிற மை பூசப்பட்டுள்ள எத்தனை சிறிய மரக் குற்றிகள் கிடைக்கும் ?


(1) 8 (2) 10 (3) 12

**22.** வெறுமையாயுள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.





(1)




(2)



(3)

**23.** வெறுமையாயுள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.





(1)




(2)



(3)


**24.** ஒரு சதுரத் தாளை எடுத்து உரு A இல் காட்டப்பட்டுள்ளவாறு நடுவில் முறிந்த கோடு வழியே இரண்டாக மடித்து உரு B இல் காட்டப்பட்டுள்ளவாறு முறிந்த கோடு வழியே வெட்டி அத்தாள் துண்டுகளாக்கப்பட்டுள்ளது.

தாளை முறிந்த கோடு வழியே மடித்தல்



உரு A

மடித்த தாளை முறிந்த கோடு வழியே வெட்டல்



உரு B

கிடைக்கும் துண்டுகள் பற்றிய சரியான கூற்று யாது ?


(1) மூன்று முக்கோணத் துண்டுகள்

(2) நான்கு முக்கோணத் துண்டுகள்

(3) ஒரு செவ்வகத் துண்டும் இரு முக்கோணத் துண்டுகளும்

[பக். 6 ஐப் பார்க்க

**25.** கீழே தரப்பட்டுள்ள வடிவத்தை ஒரு சதுரமாக மாற்றுவதற்கு அதனுடன் சேர்க்கப்பட வேண்டிய அடைப்புகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது ?



(1) 5 அடைப்புகள் (2) 9 அடைப்புகள் (3) 10 அடைப்புகள்

**26.** நான் ஒரு பேருந்தில் ஏறுவதற்காக நிரையில் நின்றேன். எனக்கு முன்னால் 6 ஆட்களும் எனக்குப் பின்னால் 4 ஆட்களும் நின்றனர். எனது நண்பர் நிரையில் நடுவில் நின்றால், அவர் நிரையில் எத்தனையாவது ஆளாக நின்றார் ?

(1) 5 ஆம் ஆள் (2) 6 ஆம் ஆள் (3) 7 ஆம் ஆள்


**27.** ஒரு கவிதையின் நான்கு வரிகள் மாற்றி எழுதப்பட்ட விதம் கீழே தரப்பட்டுள்ளது.

A - கடைப்பிடித்து நடந்திடின்
B - சத்தியந் தான் வென்றிடும்
C - காந்தி சொன்ன வழிகளைக்
D - சாந்தி எங்கும் நிலவிடும்




கருத்துள்ள கவிதை கிடைக்குமாறு பொருத்தமாக்கும்போது அவ்வரிகளின் சரியான ஒழுங்குமுறை

(1) B, D, A, C (2) C, A, D, B (3) D, C, B, A

**28.** உருவில் நான்கு ஈர்க்குத் துண்டுகள் உள்ளன.



அந்த நான்கு ஈர்க்குத் துண்டுகளையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க வடிவத்தைக் காட்டும் உரு யாது?

(1)  (2)  (3) 

**29.** நிமலன், நாதன், மீனா, குமாரி என்ற நான்கு மாணவர்களில் இருவரை ஆசிரியை தெரிவு செய்ய வேண்டியுள்ளது. ஆசிரியை அதனை ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட எத்தனை விதங்களில் செய்யலாம் ?

(1) 2 (2) 4 (3) 6

**30.** முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களைத் தெரிவு செய்க.

இலங்கையில் காட்டு வளம் விரைவாக ................. காரணமாகக் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் ..................... உள்ளது.


(1) குறைதல், அதிகமாக
(2) பாதுகாக்கப்படுதல், கட்டுப்படுத்தப்பட்டு
(3) பரவுதல், அதிகரித்து

[பக். 7 ஐப் பார்க்க

Past Papers Wiki



● ஒரு பாடசாலையின் சில இடங்களின் அமைவையும் அவ்விடங்களுக்குச் செல்வதற்கான பாதைகளையும் காட்டும் படம் கீழே தரப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு **31, 32** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




**31.** ஒரு மாணவன் காலையில் பிரதான கதவினூடாகப் பாடசாலைக்குள் பிரவேசிக்கும்போது அவனுடைய வலக் கைப் பக்கத்தில் சூரியன் உதித்துக் கொண்டு இருந்தது. அதற்கு ஏற்ப நூலகம் வகுப்புக்கு எத்திசையில் உள்ளது ?

(1) வடக்கு (2) மேற்கு (3) தெற்கு

**32.** ஒரு மாணவன் பிரதான கதவினூடாகத் தனது வகுப்புக்குச் செல்லும்போது இடப் பக்கத்திற்கும் வலப் பக்கத்திற்கும் திரும்பும் தடவைகளின் எண்ணிக்கை யாது ?

(1) இடப் பக்கத்திற்கு 3 உம் வலப் பக்கத்திற்கு 2 உம்
(2) இடப் பக்கத்திற்கு 2 உம் வலப் பக்கத்திற்கு 3 உம்
(3) இடப் பக்கத்திற்கு 4 உம் வலப் பக்கத்திற்கு 3 உம்

**33.** 49 தொடக்கம் 99 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும்போது இலக்கம் 5 ஐ எழுத வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை யாது ?

(1) 10 (2) 14 (3) 15

**34.** 4 ✱ 2 = 4 ☆ 2 என்னும் கணிதத் தொடர்புடைமையில் ✱ , ☆ என்னும் குறியீடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இரு கணிதச் செய்கைகளும் யாவை ?

(1) + உம் × உம் (2) + உம் ÷ உம் (3) − உம் ÷ உம்

**35.** ஓர் அனர்த்தம் காரணமாக மே 14 ஆந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் உட்படத் தொடர்ச்சியாக 9 நாட்களுக்கு ஒரு பாடசாலை மூடப்பட்டது. அப்பாடசாலை மறுபடியும் திறக்கப்பட்ட தினம்

(1) மே 22 செவ்வாய்க்கிழமை
(2) மே 23 செவ்வாய்க்கிழமை
(3) மே 23 புதன்கிழமை

**36.** கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் சென்ற ஒரு பேருந்து சில நகரங்களைக் கடந்து சென்ற விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

“அது பூனாவ நகரத்தைக் கடந்து செல்வதற்கு முன்னர் மாரவில நகரத்தைக் கடந்து சென்றது. அது பூனாவ நகரத்தைக் கடந்து சென்ற பின்னர் மாங்குளம் நகரத்தைக் கடந்து சென்றது.”

பேருந்து யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அதே பாதையில் திரும்பி வரும்போது அந்நகரங்களைக் கடக்கும் ஒழுங்குமுறை யாது ?

(1) பூனாவ, மாங்குளம், மாரவில
(2) மாரவில, பூனாவ, மாங்குளம்
(3) மாங்குளம், பூனாவ, மாரவில

[பக். 8 ஐப் பார்க்க

**37.** ஒரு மாணவனின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 500 மீற்றர் ஆகும். அவன் காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது மொத்தத் தூரத்தில் அரைவாசிக்குச் சென்று திரும்பி வீட்டுக்கு வந்து மறுபடியும் பாடசாலைக்குச் சென்றான். அவன் சென்ற மொத்த தூரம்


(1) 750 மீற்றர் (2) 1000 மீற்றர் (3) 1250 மீற்றர்

**38.** ஒரு சங்கத்தில் பத்து உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொரு மாதமும் ஒரு தடவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலின் ஒழுங்குமுறைக்கு ஏற்ப ஒவ்வோர் உறுப்பினரினதும் வீட்டில் சங்கத்தின் கூட்டம் நடைபெறுகின்றது. முதலாம் உறுப்பினரின் வீட்டில் கூட்டம் பெப்ரவரி மாதத்தில் நடைபெற்றது. அவருடைய வீட்டில் அடுத்ததாகக் கூட்டம் எம்மாதத்தில் நடைபெறும் ?

(1) ஒக்ரோபர் (2) நவெம்பர் (3) டிசெம்பர்

**39.** ஒரு பிள்ளை ஒரு வாரத்தில் தனது பாடசாலையைச் சுற்றி உள்ள பிரதேசத்தில் மழையும் வெயிலும் இருந்த விதம் பற்றி உருக்களின் மூலம் குறித்திருந்த விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| திங்கட்கிழமை | செவ்வாய்க்கிழமை | புதன்கிழமை | வியாழக்கிழமை | வெள்ளிக்கிழமை | சனிக்கிழமை | ஞாயிற்றுக்கிழமை |
|---|---|---|---|---|---|---|



அவ்வாரத்தில் இருந்த வானிலை நிலைமை பற்றிய சரியான கூற்று யாது ?

(1) கடும் மழை பெய்த, வெயில் இல்லாத வாரம்

(2) நல்ல மழை பெய்த அவ்வாறே வெயிலும் இருந்த வாரம்

(3) அதிக நாட்கள் வெயில் இல்லாமல் மழை பெய்த வாரம்

**40.** ஒரு பணப் பையில் ரூ. 640 பணம் நான்கு நாணயத் தாள்களாக உள்ளது. அவை

(1) ரூ. 500, ரூ. 100, ரூ. 20 ஆகியன உட்பட 4 நாணயத் தாள்கள்

(2) ரூ. 500, ரூ. 20 ஆகியன உட்பட 4 நாணயத் தாள்கள்

(3) ரூ. 500, ரூ. 50, ரூ. 20 ஆகியன உட்பட 4 நாணயத் தாள்கள்

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

**5**

**EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, AUGUST 2018**

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2018 ஓகஸ்ற்**

# வினாத்தாள் II

**1 மணித்தியாலம் 15 நிமிடம்**

**சுட்டெண் :..................................**

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ் வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
* **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்து பார்ப்பதற்காகத் தாளொன்று வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T/EMF |
| **பிரதான பரீட்சகர்**<br>மேற்பார்வை செய்தேன்.<br>இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/II/T/CH |

[பக். 2 ஐப் பார்க்க

**1.** பின்வரும் பந்தியை வாசிக்க.

மனிதர் வாழ ஆகாரம் அவசியமாகும். மனிதர் உண்ணும் உணவுகளுள் சோறு, உரொட்டி, கிழங்கு வகைகள் போன்றவை சக்தி தரும் உணவுக் கூட்டத்திலும் பால், முட்டை, மீன், பருப்பு போன்றவை வளர்ச்சிக்கு உதவும் உணவுக் கூட்டத்திலும் காய்கறிகள், கீரைகள், பழங்கள் போன்றவை பாதுகாப்புக்கு உதவும் உணவுக் கூட்டத்திலும் அடங்கும். இம் மூன்று கூட்டங்களும் அடங்கியுள்ள கலப்பு உணவோடு சுத்தமான நீர், போதுமான அளவுக்கு உட்கொள்வது ஆரோக்கியமான வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும்.

பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) சக்தி தரும் கூட்டத்தைச் சேர்ந்த ஓர் உணவை எழுதுக. ..............................................

(ii) சக்தி தரும் கூட்டம் அல்லாத **இரண்டு** உணவுக் கூட்டங்களையும் எழுதுக.

(1) ..............................................

(2) ..............................................

(iii) 'உணவு' என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

..................................

(iv) ஆரோக்கிய வாழ்க்கைக்கு, கலப்பு உணவுக்கு மேலதிகமாக உட்கொள்ள வேண்டியது யாது ?

..................................

(v) இப்பந்திக்கு மிகவும் பொருத்தமான தலைப்பைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) ஆரோக்கிய வாழ்க்கைக்குப் பொருத்தமான உணவுகள்

(2) ஆரோக்கிய வாழ்க்கைக்காக நீர் பருகுதல்

(3) கலப்பு உணவைச் சேர்ந்த உணவுக் கூட்டங்கள்

**2.** பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

(i) முகம் மலர்தல் : ..............................................................................................

(ii) நாக்குப் புரளுதல் : ..............................................................................................

**3.** பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

(i) கிராமங்கள் அழகானவையா

(ii) அந்தப் பூங்காவின் அழகுதான் என்னே

**4.** "**வானத்தில்** கரு மேகங்கள் தென்பட்டன."

இங்கு **வானத்தில்** எனும் சொல்லின் கருத்தை எழுதுக. : ..........................................

**5.** சரியான வினைச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) மூங்கில் பற்றை சரசர என்று ஒலி (எழுப்புகின்றது / எழுப்புகின்றன).

(ii) படகுகள் கரையை நோக்கிச் (செல்கின்றது / செல்கின்றன).

**6.** பின்வரும் வாக்கியங்களை **எழுத்து** மொழியில் எழுதுக.

(i) பசுக்கள் புல் மேஞ்சன.

: ..............................................................................................................

(ii) நான் தினமும் காலையில் தண்ணி குடிப்பேன்.

: ..............................................................................................................

**7.** பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க.

போதும் என்ற மனமே .................................. செய்யும் மருந்து.

[பக். 3 ஐப் பார்க்க

சுட்டெண் :....................................

**8.** தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

முடியாது. / மறக்க / பயணத்தை / கடுகதிப் / புகையிரதப் / அந்தக்

..........................................................................................................................

**9.** சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக. (வெண்ணை / வெண்ணெய்)

**10.** அகரவரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறுவது (கலைக்களஞ்சியம் / அகராதி)

**11.** பின்வரும் **இணைமொழியைப்** பூர்த்தி செய்க.

உற்றார் ....................................


**12.** பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Playground : .................................. (ii) Friend : ......................................

**13.** பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை, ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

..............................

(ii) 

..............................

**14.** பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.


(i) is/That/tree/a/mango :..........................................................................................

(ii) drinking / am / I / water : ..........................................................................................

**15.** (i) 'அம்ப கச' என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் **தமிழில்** எழுதுக. ........................

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் **தமிழ் எழுத்துக்களில்** எழுதுக.

உங்கள் வயது எத்தனை ? : ..........................................................................................

**16.** 



வட்டத்தில் உள்ள நான்கு இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய **மிகச் சிறிய** எண்ணை எழுதுக.

: ..............................

**17.** தரப்பட்டுள்ள எண்களை **ஏறுவரிசையில்** எழுதுக.

3506, 2605, 3650, 2560 : ...................., ...................., ...................., ....................

**18.** தரப்பட்டுள்ள ஒவ்வோர் எண் கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

(i) 24, 32, 40, 48, . . . (ii) 8, 16, 32, . . . , 128

**19.** ஒரு வியாபாரி வாங்கிய 256 தேங்காய்களில் $\frac{3}{4}$ ஐ விற்றான். அவன் விற்பனை செய்த தேங்காய்களின் எண்ணிக்கை யாது ?

: ..................

**20.** 608 அப்பியாசக் கொப்பிகளை, ஒரு பெட்டிக்கு 6 வீதம் பெட்டிகளில் பொதி செய்ய வேண்டியுள்ளது.

(i) ஒரு பெட்டியில் 6 வீதம் பொதி செய்வதற்குத் தேவையான பெட்டிகள் எத்தனை ? : ..................

(ii) அதன் பின்னர் எத்தனை கொப்பிகள் மீதியாக இருக்கும் ? : ..................

[பக். 4 ஐப் பார்க்க

**21.** அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு விடையளிக்குக.

| பாடசாலை | *A* | *B* | *C* | *D* |
|---|---|---|---|---|
| மாணவர் தொகை | 2285 | 2032 | 890 | 1318 |

(i) *A* பாடசாலை, *D* பாடசாலை ஆகிய இரண்டிலும் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு ?

: .....................

(ii) *C* பாடசாலையை விட *B* பாடசாலையில் எத்தனை மாணவர்கள் கூடுதலாக உள்ளனர் ?

: .....................


**22.** பி.ப. 7.45 இற்குக் கொழும்பிலிருந்து புறப்பட்ட ஒரு பேருந்துவண்டி, மறுநாள் மு.ப. 4.15 இற்கு யாழ்ப்பாணத்தை அடைந்தது. பயணத்துக்குச் செலவாகிய மொத்த நேரம் எவ்வளவு ?

: ............ மணி ............ நிமிடங்கள்

**23.** 2 லீற்றர் 500 மில்லிலீற்றர் கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு 500 மில்லிலீற்றர் கொள்ளளவுள்ள பாத்திரமொன்றினால் எத்தனை தடவைகள் நீர் ஊற்றுதல் வேண்டும் ?

: .....................


**24.**




*A*, *B*, *C* எனும் மூன்று நகரங்களின் அமைவு படத்தில் காட்டப்பட்டுள்ளது. *A* இற்கும் *B* இற்கும் இடையிலான தூரம் 45 km ஆகும். *A* இற்கும் *C* இற்கும் இடையிலான தூரம் 161 km ஆகும். *B* இற்கும் *C* இற்கும் இடையிலான தூரம் எவ்வளவு ?

: .................. km


**25.**




படத்தில் 400 ml கொள்ளளவுள்ள ஒரு பாத்திரம் காட்டப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதி நீரினால் நிரப்பப்பட்டுள்ளது. அப்பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவை ?

: .................. ml

**26.**




உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை பத்தின் பங்குகளாக எழுதுக.

: .....................

**27.** பின்வரும் சிட்டையைப் பூர்த்தி செய்க.

| பொருள் | 1 kg இன் விலை | | அளவு | விலை | |
|---|---|---|---|---|---|
| | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| சீனி | 120 | 00 | 500 g | 60 | 00 |
| தேயிலை | 850 | 00 | 100 g | ... | 00 |
| பால் மா | ... | 00 | 250 g | 150 | 00 |
| **மொத்தப் பணம்** | | | | ... | 00 |

**28.** கடிகார முகத்தில் காட்டப்பட்டுள்ள நேரம் யாது ?




நேரம் : ....................

**29.** மாணவர் குழுவொன்று அதிகமாக விரும்பும் பழம் தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.


(i) வாழைப்பழத்தை விரும்பும் மாணவரின் எண்ணிக்கை 9 ஆகும். அதனை வரைபில் வரைந்து காட்டுக.

(ii) அதிகமான மாணவர்கள் விரும்பும் பழம் எது ?

: ........................

அப்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

: ........................




● **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** ஒரு நாட்டுக்கே உரித்தான தாவரங்கள் மாத்திரம் அடங்கியுள்ள விடையைத் தெரிவு செய்க.
(1) குங்கிலிய மரம், பெரும்பிரம்பு, நில வேம்பு (2) மா, பெரும்பிரம்பு, ஈரப்பலா
(3) றம்புட்டான், ஆனைக்கொய்யா, மா (4) றம்புட்டான், ஈரப்பலா, குங்கிலிய மரம்

**31.** நீரினாலும் காற்றினாலும் பிராணிகளினாலும் முறையே பரம்பும் வித்துக்கள் அடங்கியுள்ள விடை எது ?
(1) எண்ணை, தேங்காய், மா (2) கடல்மாங்காய், எண்ணை, மரமுந்திரிகை
(3) மா, கடல்மாங்காய், தேங்காய் (4) மரமுந்திரிகை, மா, எண்ணை

**32.** தாவரங்களுக்குப் பிராணிகள் செய்யும் நன்மையான செயல்
(1) செவ்வெறும்புகள் தாவர இலைகளைச் சேர்த்துக் கூடு அமைத்தல்
(2) வௌவால்கள் பழங்களை உண்டபின் வித்துக்களை வெவ்வேறு இடங்களிற் போடுதல்
(3) முள்ளம்பன்றிகள் தாவரங்களின் கிழங்குகளையும் வேர்களையும் உண்ணுதல்
(4) சில பிராணிகள் காடுகளில் உள்ள தாவரங்களை வீழ்த்துதல்

**33.** தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் பிராணி
(1) தேனீ (2) வண்ணத்துப்பூச்சி (3) மயிர்க்கொட்டி (4) சிட்டுக்குருவி


**34.** ஒரு நாட்டுக்கே உரித்தான முலையூட்டி விலங்கு
(1) ஆந்தை (2) வௌவால் (3) சுண்டெலி (4) மரத்தவளை

**35.** ஈக்களால் பரவக்கூடியது
(1) மலேரியா நோய் (2) அம்மை நோய் (3) விசர்நாய்க்கடி நோய் (4) கழிச்சல் நோய்

**36.** அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய நோய்
(1) யானைக்கால் (2) டெங்கு (3) வாந்திபேதி (4) சிக்குன்குன்யா

**37.** கொழுப்பு அதிகம் அடங்கியுள்ள ஓர் உணவுக்கான உதாரணம்
(1) கடலை (2) சோயா அவரை (3) நிலக்கடலை (4) கவ்பி

[பக். 6 ஐப் பார்க்க

**38.** 


படங்களில் தரப்பட்டுள்ள பாசிப்பயறு வித்துக்கள் அடங்கிய பாத்திரங்களைச் சில நாட்களின் பின்னர் அவதானிக்கும் போது, எந்தப் பாத்திரத்திலுள்ள பாசிப்பயறு வித்துக்கள் முளைத்திருப்பதைக் காணலாம்?

(1) *A* (2) *B* (3) *C* (4) *D*

**39.** மழை இல்லாத நாட்களில் அதிகாலையிலும் அந்திமாலையிலும் வானில் தெளிவாகத் தெரியும் கோள்

(1) வெள்ளி ஆகும். (2) செவ்வாய் ஆகும்.
(3) சனி ஆகும். (4) வியாழன் ஆகும்.

**40.** ஒருவர் மயக்கமடைந்ததும் உடனடியாகச் செய்ய வேண்டியது

(1) உடலை நன்கு போர்த்துதல்
(2) நன்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்தல்
(3) குளிர் நீர் பருகக் கொடுத்தல்
(4) வாயினுள் கரண்டியை வைத்தல்

**41.** நிலத்தில் வளரும் தாவரமொன்று நீரையும் பசளையையும் பெறுவது

(1) வேர்களினால் (2) இலைகளினால்
(3) பூக்களினால் (4) வித்துக்களினால்

**42.** 'செக்கு' பயன்படுத்தப்படுவது

(1) ஆணி அறைவதற்கு (2) கருங்கல் உடைப்பதற்கு
(3) எண்ணெய் பிழிவதற்கு (4) பாரம் இழுப்பதற்கு

**43.** நுளம்புகளை அழிப்பதற்குப் பொருத்தமான ஒரு முறை **அல்லாதது**

(1) சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருத்தல்
(2) துளசி இலைகளை எரித்துப் புகையூட்டுதல்
(3) நீர் தேங்கி நிற்கும் இடங்களை அழித்தல்
(4) நீர் நிரப்பிய பாத்திரத்தில் மலர்களை இட்டு வைத்தல்

**44.** நிலத்தில் ஒன்றுசேரும் பல்வேறு கழிவுப்பொருள்களைச் சிறு துண்டுகளாக்கி, அவை உக்குவதற்குத் துணை புரியும் பிராணி

(1) நத்தை (2) செவ்வெறும்பு (3) கறையான் (4) கரப்பான் பூச்சி

**45.** இலங்கையின் தேசிய விளையாட்டு எது ?

(1) வலைப்பந்து (2) வொலிபோல் (3) கிரிக்கட் (4) எல்லே

**46.** தண்டுத் துண்டுகளை நாட்டுவதன் மூலம் புதிய தாவரங்களைப் பெறக்கூடிய **இரண்டு** பயிர்களாவன

(1) மரவள்ளி, பசளி (2) சோளம், மரவள்ளி
(3) சோளம், பசளி (4) கறிமிளகாய், கங்குன்


**47.** 'நீர்ப் பிசாசு' என்பது

(1) நீர் நிலைகளுக்கு அருகே வாழும் ஒரு பிராணி
(2) இரவு வேளைகளில் பயிர் நிலங்களுக்கு வரும் ஒரு பிராணி
(3) பண்டைய கதையொன்றில் இடம்பெற்றுள்ள மாயக் கதாபாத்திரம்
(4) பிராணிகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காகப் பயன்படும் ஓர் அமைப்பு

[பக். 7 ஐப் பார்க்க

සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

48. $A, B, C$ ஆகிய சிறிய மூன்று மின்குமிழ்கள், மூன்று இரும்பு ஆணிகள், உலர்கலம், உலோகத்தாலான இரண்டு கடதாசிக் கவ்விகள், சில கம்பித்துண்டுகள் ஆகியவற்றைக் கொண்டு பலகைத் துண்டொன்றின் மீது படத்திற் காட்டியுள்ளவாறு அமைப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின்படி ஒளிருவது




(1) மின்குமிழ் $A$ மாத்திரம்
(2) மின்குமிழ் $B$ மாத்திரம்
(3) மின்குமிழ் $C$ மாத்திரம்
(4) $A, B, C$ ஆகிய மூன்று மின்குமிழ்களும்

49. பொலீசார் சில சோதனை நடவடிக்கைகளின் போது பயிற்றப்பட்ட நாய்களைப் பயன்படுத்துவர். அதன் போது பிரதானமாக நாயின் எந்த இயல்பு பயன்படுத்தப்படும் ?

(1) கூர்மையான கண் பார்வை
(2) தெளிவாகக் காது கேட்டல்
(3) சிறந்த மோப்பசக்தி
(4) வேகமான ஓட்டம்

50. படத்தில் காட்டியுள்ள வீதிச் சைகையினால் கூறப்படும் செய்தி யாது ?



(1) முன்னால் ஒளிச் சமிக்ஞை
(2) வாகனம் நிறுத்தும் இடம் முன்னால்
(3) சாய்வான பாதை முன்னால்
(4) முன்னால் பாதை மூடப்பட்டுள்ளது.

51. இலங்கையின் அரச இலச்சினையில் 'சௌபாக்கியத்தைக்' குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடு யாது ?

(1) நிறைகுடம் (2) நெற்கதிர்கள் (3) தர்ம சக்கரம் (4) சூரியனும் சந்திரனும்

52. பாரமான ஒரு பொருளை ஓர் இடத்திலிருந்து மற்றுமோர் இடத்துக்குக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஓர் உபகரணம் **அல்லாதது**

(1) பாரம் தூக்கி (2) கப்பி (3) சில்லு வண்டி (4) குறடு

53. பனிக்கட்டிகள் சிலவற்றை ஒரு கண்ணாடிக் குவளையினுள் இட்டு, சிறிது நேரம் வெளியே வைத்திருந்த பின்னர் அதில் அவதானிக்க **முடியாதது**

(1) பனிக்கட்டி உருகியிருத்தல்
(2) குவளையில் நீர் சேர்ந்திருத்தல்
(3) குவளையிலிருந்து வளிக்குமிழிகள் வெளியேறுதல்
(4) குவளையில் வெளிப்புறம் ஈரமாக இருத்தல்

54. மகாவலி, வளவை ஆகிய நதிகள் கடலிற் சேரும் இடங்கள் முறையே

(1) மட்டக்களப்பு, அம்பலாந்தோட்டை
(2) மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை
(3) திருகோணமலை, கதிர்காமம்
(4) திருகோணமலை, அம்பலாந்தோட்டை

55. பின்வரும் விளையாட்டுக்களில் உடற்சக்தி அதிக அளவில் விரயமாகும் விளையாட்டு

(1) தாம் இழுத்தல் (2) கயிறிழுத்தல் (3) சோகி போடுதல் (4) கரம் அடித்தல்

56. தேசிய கீதத்தைப் பாடும்போது உடலை வைத்திருக்க வேண்டிய சரியான நிலை **அல்லாதது**

(1) கவனமாக நிற்றல்
(2) இலகுவாக நிற்றல்
(3) உடலை நேராக நிமிர்த்தி வைத்திருத்தல்
(4) கண்களைத் திறந்து வைத்திருத்தல்

[பக். 8 ஐப் பார்க்க

**57.** இயற்கையான மலர்களையும் இலைகளையும் கொண்டு வாழ்த்து அட்டை தயாரிக்கும் நான்கு படிமுறைகள் பின்வருமாறு.

*A* - உலர்த்திய பூக்களையும் இலைகளையும் தேவைக்கேற்ப ஒட்டுதல்
*B* - தேவையான அளவுள்ள அட்டைத் துண்டொன்றை வெட்டி எடுத்தல்
*C* - இயற்கைப் பூக்களையும் இலைகளையும் புத்தகப் பக்கங்களுக்கு இடையே வைத்து உலர விடுதல்
*D* - பொருத்தமான வாழ்த்து அல்லது நற்பிரார்த்தனையை எழுதுதல்

இவற்றின் சரியான ஒழுங்குமுறை யாது ?

(1) *A, D, C, B* (2) *B, A, C, D* (3) *C, B, A, D* (4) *C, D, A, B*

**58.** இயற்கையான காற்றின் சக்தி பயன்படும் ஒரு சந்தர்ப்பம்

(1) பலூன் ஊதுதல்
(2) புல்லாங்குழல் வாசித்தல்
(3) ரயருக்கு வாயு நிரப்புதல்
(4) பட்டம் பறக்க விடல்

**59.** படத்தில் தரப்பட்டுள்ள இலச்சினையினால் குறிக்கப்படுவது



(1) ஸ்ரீ லங்கா விமான சேவை
(2) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
(3) இலங்கை கனியநெய்க் கூட்டுத்தாபனம்
(4) இலங்கை அஞ்சல் சேவை

**60.** சித்திரப் போட்டியொன்றில் முதலாமிடத்தை வென்றுள்ள சத்தியாவுக்கு, சித்திரக் கண்காட்சியொன்றைப் பார்வையிடுவதற்காக, ஜப்பானுக்குச் செல்ல அழைப்புக் கிடைத்துள்ளது. நீங்கள்தான் சத்தியா எனக் கருதி, அச்சந்தர்ப்பத்தில் உங்களது மனதில் தோன்றியவை பற்றி **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்துக்குக் குறையாத சொற்களைக் கொண்டிருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..........................................................................................................

..........................................................................................................

2. ..........................................................................................................

..........................................................................................................

3. ..........................................................................................................

..........................................................................................................

* * *

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න













**පොත් 20කට වඩා මිලදී ගැනීමකදී, 20%ක විශේෂ මිල අඩු කිරීමක්**

**පොත් 50කට වඩා මිලදී ගැනීමකදී, 25%ක විශේෂ මිල අඩු කිරීමක්**

**0777812087/0756999990**

ප්‍රාථමික ගුරුවරුන් සඳහා අවශ්‍ය ඡේද පොත්, දැලිස, විභව්‍යතා, ශිෂ්‍යත්ව කට්ටල, විශේෂ වට්ටම් සමග

මිලදී ගත හැක













**පොත් 20කට වඩා මිලදී ගැනීමකදී, 20%ක විශේෂ මිල අඩු කිරීමක්**

**පොත් 50කට වඩා මිලදී ගැනීමකදී, 25%ක විශේෂ මිල අඩු කිරීමක්**

**0777812087/0756999990**

ප්‍රාථමික ගුරුවරුන් සඳහා අවශ්‍ය ඡේද පොත්, දැලිස, විභව්‍යතා, ශිෂ්‍යත්ව කට්ටල, විශේෂ වට්ටම් සමග

මිලදී ගත හැක